# இரும்பின் குரல்

இது ஒரு **AMMAN - TRY**-யின் முயற்சி

திருச்சி | மார்ச் 2024 | 12 பக்கம் | இலவசம் | பதிப்பு 9

**AMMAN-TRY GROUP**

**BILLETS | TMT BARS | PIPES | TUBES**



**Bureau of Indian Standards, AMMAN-TRY STEELS** நிறுவனத்திற்கு
**" Non - Failure TMT BAR "** விருது வழங்கி கௌரவித்தது.
இவ்விருதினை நிர்வாக இயக்குனர் **திரு.எம். சோமசுந்தரம்** அவர்கள்
பெற்றுக்கொண்டார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

# பார் பெண்டர் சந்திப்பு

பார் பெண்டர்களுக்கு Quality TMT bars பற்றிய விழிப்புணர்வு அளிக்கும் வகையில் AMMAN-TRY நிறுவனம் எங்களது விற்பனையாளர்களோடு இணைந்து பார் பெண்டர் சந்திப்புகளை 22 வருடங்களுக்கு மேலாக நடத்தி வருகிறது. இதில் பங்கு பெறும் அனைவருக்கும் AMMAN-TRY –ன் LPLS முறையில் தயாரிக்கப்பட்ட 550 D கம்பிகளுக்கும், மற்ற 550 கம்பிகளுக்கும் இடையிலான வித்தியாசம் பற்றியும், நமது கம்பியின் Micro Structure பற்றியும், அதன் சிறப்பம்சங்கள் பற்றியும், CRS கம்பிகளின் பயன்பாடு பற்றியும், AMMAN-TRY கம்பிகள் தேவையான அளவுகளில் கிடைப்பதை பற்றியும் மற்றும் Ready Made Steel (Rings) பற்றியும் விளக்கம் அளிக்கப்படுகின்றது.பின்னர் இச்சந்திப்பில் கலந்துகொண்ட அனைவருக்கும் இரவு விருந்தோடு அவர்களுக்கு T-Shirt, Cap, Silver Utensils, Brochures மற்றும் Catalogue அன்பளிப்பாக வழங்கப்படுகின்றது.

பார் பெண்டர் சந்திப்பு பற்றிய விவரங்கள் பின்வருமாறு

| நாள் | விற்பனையாளர் முகவரி | இடம் | பார்பெண்டர்கள் |
|---|---|---|---|
| 09-10-2023 | ஸ்ரீ திருச்செந்தூர் முருகன் ஸ்டீல்ஸ் | ஓம் சக்தி கல்யாண மண்டபம்,விருதுநகர் | 80 |
| 10-10-2023 | பிரவீணா டிரேடர்ஸ் | ஸ்ரீ காமாட்சி அம்மன் மண்டபம், புத்தூர் | 80 |
| 11-10-2023 | கற்பகம் டிம்பர்ஸ் | சசி மஹால், - தென்காசி | 50 |
| 11-10-2023 | ராசி ஸ்டீல்ஸ் | சசி மஹால், - தென்காசி | 50 |
| 11-10-2023 | கனி வர்த்தகர்கள் | சசி மஹால், - தென்காசி | 50 |
| 11-10-2023 | மாலினி டிரேடர்ஸ் | சசி மஹால், - தென்காசி | 50 |
| 11-10-2023 | விநாயகா ஹார்டுவேர் | சசி மஹால், - தென்காசி | 50 |
| 12-10-2023 | PSVS தங்கம் ஸ்டீல்ஸ் | விக்ரமசிங்கபுரம் | 40 |
| 12-10-2023 | வேலவன் டிரேடர்ஸ் | ஆழ்வார்குறிச்சி | 20 |
| 13-10-2023 | நாசர் ஸ்டீல்ஸ் | வீரநல்லூர் | 25 |
| 13-10-2023 | M.M டிரேடர்ஸ் | பத்தமடை | 60 |
| 19-10-2023 | ஸ்ரீ பாலாஜி ஸ்டீல் கார்ப்பரேஷன் | கே.டி.வி மஹால்,ஜெயங்கொண்டம் | 150 |
| 10-11-2023 | ரஹ்மானியா டிரேடர்ஸ் | கரம்பக்குடி | 50 |
| 27-12-2023 | ஜெயராம் டிரேடர்ஸ் | கொரடாச்சேரி | 200 |
| 29-01-2024 | ஸ்ரீ மீனாட்சி ஸ்டோர்ஸ் | APM மஹால் - எள்ளேரி,காட்டுமன்னார்கோவில் | 50 |
| 29-01-2024 | அபி ஏஜென்சிஸ் | APM மஹால் - எள்ளேரி | 50 |
| 30-01-2024 | கொண்டியார் உரக்கடை | ஸ்ரீ தனலட்சுமி மண்டபம், பாப்பாக்குடி | 100 |
| 31-01-2024 | விக்னேஷ் ஏஜென்சிஸ் | சிதம்பரம் | 50 |



## பார் பெண்டர் சந்திப்பு




# BUILD EXPO MEET

வீடு கட்டுபவர்களுக்கு கட்டுமான பொருட்களை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தவும், தரமான கட்டுமானங்களை உருவாக்கவும் Civil Engineers-களால் தொடர்ச்சியாக பல இடங்களில் "கட்டுமான பொருட்களின் கண்காட்சியை" நடத்தி வருகின்றனர் .இதில் AMMAN - TRY நிறுவனம் தொடர்ச்சியாக பங்கு பெற்று வருகின்றது. இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் எங்களது Sales Team, AMMAN - TRY TMT கம்பிகளில் பயன்படுத்தப்படும் மூலப் பொருட்கள் பற்றியும் கம்பிகள் தயாரிக்கும் முறை பற்றியும், LPLS முறையில் தயாரிக்கப்பட்ட 550 D கம்பிகளின் சிறப்பம்சங்கள் பற்றியும் விரிவான விளக்கம் அளித்து பின்பு அவர்களுக்கு Pen, Keychain, Brochure மற்றும் catalogue வழங்கப்பட்டு வருகிறது.




**BUILD EXPO** பற்றிய விவரங்கள் பின்வருமாறு

| வ.எண் | நடைபெற்ற நாட்கள் | மாவட்டம் |
|---|---|---|
| 1 | 29-09-2023 To 01-10-2023 | கோபிசெட்டிபாளையம் |
| 2 | 29-09-2023 To 01-10-2023 | வேலூர் |
| 3 | 22-12-2023 To 24-12-2023 | ஈரோடு |
| 4 | 22-12-2023 To 24-12-2023 | பழனி |
| 5 | 22-12-2023 To 24-12-2023 | ஓசூர் |
| 6 | 23-12-2023 To 25-12-2023 | திருச்சி |
| 7 | 29-12-2023 To 31-12-2023 | தர்மபுரி |
| 8 | 05-01-2024 To 08-01-2024 | சேலம் |



# பொறியாளர் சந்திப்பு:

28.10.2023 அன்று நமது விற்பனையாளர் சன் ஸ்டீல்ஸ் - பட்டுக்கோட்டை உடன் இணைந்து பட்டுக்கோட்டை சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள 80-க்கும் மேற்பட்ட பொறியாளர்கள் பங்குபெற்ற சந்திப்பு கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. இதில் AMMAN-TRY நிறுவனம் கலந்து கொண்டு AMMAN - TRY TMT கம்பிகளில் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் பற்றியும் கம்பிகள் தயாரிக்கும் முறை பற்றியும். LPLS முறையில் தயாரிக்கபட்ட 550 D கம்பிகளின் சிறப்பம்சங்கள் பற்றியும் விரிவான விளக்கம் அளிக்கப்பட்டு பின்பு அவர்களுக்கு Pen, keychain, brochure மற்றும் catalogue வழங்கப்பட்டது.






01 டிசம்பர் 2023 அன்று Builders Association of India - திண்டுக்கல் மையத்தின் - "ANNUAL GENERAL BODY MEETING" KODAI INTERNATIONAL HOTEL, கொடைக்கானலில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியின் "MAIN SPONSOR" AMMAN-TRY நிறுவனம் என்பதில் பெருமிதம் கொள்கிறோம். இந்த நிகழ்ச்சியில் திண்டுக்கல் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து 100-க்கும் மேற்பட்ட பொறியாளர்கள் கலந்து கொண்டனர். இதில் AMMAN-TRY ன் தர கட்டுபாட்டு மேலாளர் AMMAN-TRY/TMT கம்பிகளின் தரத்தை பற்றியும், தயாரிக்கும் முறை பற்றியும், உபயோகிக்கும் மூல பொருட்கள் பற்றியும் விளக்கம் அளித்தார். இதை தொடர்ந்து பங்கு பெற்ற அனைவருக்கும், Calendar, 5M Tape, brochure மற்றும் catalogue வழங்கப்பட்டது.

## Industrial Visit(IV)





AMMAN-TRY நிறுவனம் பல்வேறு பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு Industrial Visit-ற்கு அனுமதி அளிக்கிறது. அவ்வாறு வரும் மாணவ மாணவிகளுக்கு கம்பி தயாரிக்கும் தொழிற்சாலை எவ்வாறு செயல்படுகிறது என்பதை பற்றியும், TMT கம்பிகள் தயாரிக்க பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் பற்றியும், கம்பிகள் தயாரிக்கும் முறை பற்றியும், கம்பிகளுக்கு செய்யப்படும் பல்வேறு விதமான தர பரிசோதனை பற்றியும் விளக்கம் அளிக்கபடுகின்றது.







**Industrial Visit(IV)** பற்றிய விவரங்கள் பின்வருமாறு

| வ.எண் | தேதி | கல்லூரி | மாணவர்கள் |
|---|---|---|---|
| 1 | 04,05-10-2023 | M.A.M பொறியியல் கல்லூரி, திருச்சி | 90 |
| 2 | 18-10-2023 | M.A.M பொறியியல் கல்லூரி, திருச்சி | 90 |
| 3 | 20-11-2023 | J.J. பொறியியல் & தொழில்நுட்பக் கல்லூரி, திருச்சி | 80 |
| 4 | 08-12-2023 | CARE பொறியியல் கல்லூரி, திருச்சி | 70 |










## TOUR SCHEME - 1
### இலங்கை சுற்றலா

AMMAN-TRY TMT கம்பிகளை கொள்முதல் செய்து விற்பனை இலக்கை அடைந்த 60 விற்பனையாளர்களுக்கு நவம்பர் மாதம் 2023-ல் - இலங்கை நாட்டிற்கு சுற்றலா ஏற்பாடு செய்யப்பட்டு சுற்றுலா தலங்களான பின்னவல யானைகள் இல்லம், புத்தர் கோவில், ஆமை பண்ணை & மடு ஆற்றில் படகு சவாரி, கொழும்பு நகர சுற்றுப்பயணம்: பாராளுமன்ற கட்டிடங்கள்; BMICH; சுதந்திர சதுக்கம், ஹோட்டலில் கலாச்சார நிகழ்ச்சி. மற்றும் பல்வேறு சுற்றுலா தலங்களுக்குச் சென்று மகிழ்ச்சி அடைந்தார்கள்.

## TOUR SCHEME - 2
### வியட்நாம் சுற்றலா

AMMAN-TRY TMT கம்பிகளை கொள்முதல் செய்து விற்பனை இலக்கை அடைந்த 65 விற்பனையாளர்களுக்கு டிசம்பர் மாதம் 2023-ல் -வியட்நாம் நாட்டிற்கு சுற்றலா ஏற்பாடு செய்யப்பட்டு அவர்கள் வியட்நாமின் முக்கிய இடங்களான Ninh Binh city, Mekong Delta, Halong bay, ஹோ சி மின் நகரம், Ch Chi சுரங்கப் பாதை, வின் ட்ராங் பகோடா, Ngoc Son கோயில், மற்றும் பல்வேறு நீர்நிலைகள், படகு சவாரி. சுண்ணாம்பு குகைகள் போன்றவற்றை பார்வையிட்டு மகிழ்ந்தனர்.






























## DEALERS GOLD COIN SCHEME




திருச்சியை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வரும் AMMAN-TRY STEELS PVT LTD நிறுவனம் தமிழகம் முழுவதும் சுமார் 450க்கும் மேற்பட்ட அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்களை கொண்டு செயல்பட்டு வருகின்றது. விற்பனையாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில் தங்க நாணய பரிசுத் திட்டம் அறிமுகப்படுத்தி விற்பனை இலக்கை அடைந்த 200க்கும் மேற்பட்ட விற்பனையாளர்களுக்கு AMMAN-TRY அலுவலகத்தில் தங்க நாணயம் வழங்கப்பட்டது. மேலும் இதில் கலந்து கொள்ள முடியாத விற்பனையாளர்களுக்கு அவர்களின் கடைகளுக்கே எடுத்து சென்று எங்களது மேலாளர்கள் தங்க நாணயத்தை வழங்கி வந்தனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறோம்.




## CHENNAI & TIRUNELVELI FLOOD RELIEF

டிசம்பர் 2023-ல் மிக்ஜாம் புயல் தாக்குதலால் ஏற்பட்ட பெரு வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட சென்னை மற்றும் ஆந்திரா சுற்றுவட்டார பகுதி மக்களுக்கு AMMAN-TRY நிறுவனம் தங்கள் அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்கள் மூலம் 2000 பாய்கள் மற்றும் 2000 போர்வைகள் வெள்ள நிவாரண உதவியாக வழங்கப்பட்டது.

மீண்டும் டிசம்பர் 2023-ல் ஏற்பட்ட மற்றொரு வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட திருநெல்வேலி, நாகர்கோவில், தென்காசி, தூத்துக்குடி சுற்றுவட்டார பகுதி மக்களுக்கு AMMAN-TRY நிறுவனம் தங்கள் அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்கள் மூலம் 2000 பாய்கள் மற்றும் 2000 போர்வைகள் வெள்ள நிவாரண உதவியாக வழங்கப்பட்டது.

# Special Events



## Bureau of Indian Standards

இந்திய தர நிர்ணய அமைவனத்தின் (பி.ஐ.எஸ்) 77-வது நிறுவன நாள் விழாவனது 6 ஜனவரி 2024 அன்று கொண்டாடப்பட்டது .இதை முன்னிட்டு நடைபெற்ற விழாவில் திருச்சி AMMAN - TRY PVT LTD நிறுவனத்திற்கு தொடர்ச்சியாக 7 வருடங்களுக்கு மேலாக தரப் பரிசோதனையில் தேர்ச்சி பெற்று வரும் "NON - FAILURE TMT BAR" விருது வழங்கி கவுரவிக்கப்பட்டுள்ளது. இவ்விருதினை AMMAN - TRY STEELS நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் திரு.எம்.சோமசுந்தரம் அவர்கள் பெற்றுக் கொண்டார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.



மத்திய அரசின் நிதி ஆயோக் கீழ் இயங்கும் சிஐடிசி அமைப்பின் குழு எங்களது தொழிற்சாலை நிறுவனத்திற்கு வருகை தந்து தர சோதனை, மூலப்பொருள், பாதுகாப்பு அம்சங்கள், பராமரிப்பு, சுற்றுச்சூழல் சோதனை, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் போன்றவற்றை முழுமையாக ஆய்வு செய்து பிறகு அகில இந்திய அளவில் வழங்கும் "CIDC அங்கீகார சான்றிதழ்" 10 நவம்பர் 2023 அன்று எங்கள் நிறுவனத்திற்கு வழங்கியது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.






BIS

இந்திய தர நிர்ணய அமைவனத்தின் கிளை சார்பாக 13 OCTOBER 2023 அன்று "உலகத் தரக்குறியீடு தினம்" Courtyard by Marriott, Madurai ஹோட்டலில் சிறப்பாக நடைப்பெற்றது. இதில் எங்களது நிறுவனத்திற்க்கு " **BEST SUPPORT AWARD-2023** " வழங்கப்பட்டது. என்பதை மிகுந்த பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.








ஜனவரி 7, 8 தேதிகளில் தமிழ்நாட்டின் "உலக முதலீட்டாளர்கள் மாநாடு" சென்னையில் மிக பிரம்மாண்டமாக நடைபெற்றது. இந்த மாநாட்டில் எங்களது நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் திரு.எம்.சோமசுந்தரம் அவர்கள் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு "எதிர்காலத்தில் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் உலக சந்தைகளை எப்படி எதிர்கொள்வது மற்றும் மத்திய, மாநில அரசிடம் இருந்து கிடைக்க வேண்டிய சலுகைகள் மற்றும் தேவைகளை எடுத்துரைத்து உரையாற்றினார்" அவரின் உரை மிகவும் வரவேற்பு பெற்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மத்திய அரசு மற்றும் இந்திய தொழில்துறை பங்களிப்புடன் "கட்டுமான தொழில் வளர்ச்சி கவுன்சில்" (சிஐடிசி), நிதி ஆயோக், மத்திய அரசு மற்றும் இந்திய கட்டுமானத் துறை ஆகியவற்றால் கூட்டாக சிறப்பாக செயல்படுகிறது. கட்டிடத்துறையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பான புதிய கட்டிட தொழிற்நுட்பங்கள் பற்றிய கருத்தரங்கம் சென்னை ஹோட்டல் கிரவுண் பிளாசா அடையாரில் 27-10-2023 அன்று மிகப் பிரம்மாண்டமாக நடைபெற்றது. இதில் எங்களது நிறுவனத்தின் "தொழிற்நுட்ப விளக்கக்காட்சி, கட்டுமானம் நிலையான பொருட்கள் / நடைமுறைகளில் வளர்ந்து வரும் தொழிற்நுட்பங்கள்" பற்றிய காணொளி திரையிடப்பட்டதோடு எங்களது தொழிற்நுட்ப மேலாளர் திரு.கே.விசுவநாதன் அவர்கள் சிறப்புரையாற்றினார். மேலும் இதில் AMMAN-TRY STALLS கண்காட்சியில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்ட அனைவருக்கும் எங்களது Sales Team, AMMAN - TRY TMT கம்பிகளில் பயன்படுத்தப்படும் மூலப் பொருட்கள் பற்றியும் கம்பிகள் தயாரிக்கும் முறை பற்றியும்,LPLS முறையில் தயாரிக்கபட்ட 550 D கம்பிகளின் சிறப்பம்சங்கள் பற்றியும் விரிவான விளக்கம் அளித்தனர். எங்களது STALL-யை தமிழக அரசின் பொதுபணித்துறை முதன்மை செயலாளர் DR.B.CHANDRAMOHAN.,IAS., அவர்கள் பார்வையிட்டார் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறோம். சிஐடிசி நிகழ்ச்சிக்கு ஸ்பான்சர் செய்ததில் AMMAN-TRY நிறுவனம் மிகவும் பெருமிதம் கொள்கிறது.










BIS, மதுரை கிளை 2023 நவம்பர் 23 மற்றும் 24 ஆகிய தேதிகளில் திருச்சியில் 2 நாள் கேப்சூல் கோர்ஸ் நடத்தியது. இதில் பிஐஎஸ் தலைவர், இணை இயக்குனர் மற்றும் சில இரும்பு உற்பத்தியாளர்கள் என அனைவரும் Amman-Try தொழிற்சாலைக்கு வருகை தந்திருந்தார்கள்.

எஃகு மற்றும் எஃகு தயாரிப்புகள் துறையில் தரக் கட்டுப்பாட்டுப் பணியாளர்களுக்காக வடிவமைக்கப்பட்ட இந்தத் திட்டம், உயர்மட்ட தரத் தரங்களை நிலைநிறுத்தவும் மேம்படுத்தவும் சிறப்பு நுண்ணறிவுகளுடன் தொழில் வல்லுநர்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. AMMAN-TRY இந்த முயற்சியின் ஒரு பகுதியாக இருப்பதில் பெருமிதம் கொள்கிறது.இது தொழில்துறையில் நிபுணத்துவத்தின் முன்னேற்றத்திற்கு பங்களிக்கிறது.






தமிழ்நாடு அரசு சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் துறை மாவட்ட தொழில் மையம் (திருச்சிராப்பள்ளி) சார்பாக கோர்ட்யாட்-மாரியாட் ஹோட்டல் திருச்சியில், 28 நவம்பர் 2023 அன்று "தொழில் முதலீடுகள் மாநாடு" குறித்த முன்னோட்ட நிகழ்ச்சியில் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் சார்பாக எங்களது நிர்வாக இயக்குநர் திரு.எம்.சோமசுந்தரம் கோரிக்கைகளை தொழில்துறை அமைச்சர் அவர்களிடம் வழங்கினார்.



24 -10- 2023 அன்று எங்களது நிர்வாக இயக்குநர் **திரு.எம்.சோமசுந்தரம்** அவர்கள் " திருச்சியில் " **SAGIRAA A2 SWEET & ICE CREAM SHOP**" சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு திறந்து வைத்து பரிசுகளை வழங்கினார்.



07 டிசம்பர் 2023 அன்று எங்களது நிர்வாக இயக்குநர் **திரு.எம்.சோமசுந்தரம்** அவர்கள் " திருச்சி Tharnbura Hotel" திறப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக பங்குபெற்று திறந்து வைத்தார் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறோம்.








திருச்சியில், மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு நடைபயணம், பிங்கத்தான் 15-10-2023 அன்று சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக எங்களது நிர்வாக இயக்குநர் திரு.எம்.சோமசுந்தரம் அவர்கள் பங்குபெற்று சிறப்புரை ஆற்றினார் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறோம். இந்நிகழ்ச்சிக்கு ஸ்பான்சர் செய்ததில் **AMMAN - TRY** நிறுவனம் பெருமிதம் கொள்கிறது.






திருச்சி மாவட்ட "சிவில் இன்ஜினியர்ஸ் அசோசியேசன்" சார்பாக புத்தாண்டு விழா கொண்டாட்டம் 17-12-2023 அன்று காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை திருச்சி கரூர் பைபாஸ் ரோட்டில் உள்ள தாஜ் திருமண மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. இதில் AMMAN-TRY (Vice President (Finance & Sales) திரு.V.முருகானந்தம் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறோம்.

30 January 2024 அன்று ரேடிசன் ஹோட்டல் - சேலத்தில் நடைபெற்ற "Business Success Strategy " என்ற வெற்றியாளர்கள் கருத்தரங்கில் "பிரபலங்களை மட்டும் வைத்து தொழிலை உயர்த்த முடியாது" என்னும் தலைப்பில் எங்களது நிர்வாக இயக்குநர் திரு.எம்.சோமசுந்தரம் அவர்கள் பங்குபெற்று சிறப்புரை ஆற்றினார். இதில் 300-க்கும் மேற்பட்ட தொழில் முனைவோர்கள், மாணவர்கள் பங்கேற்றனர்.







24 டிசம்பர் 2023 அன்று திருச்சி நகைச்சுவை மன்றம் 25-வது ஆண்டு துவக்க விழானது ஸ்ரீமதி இந்திரா காந்தி மகளிர் கல்லூரியில் மிக பிரம்மாண்டமாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் எங்களது நிர்வாக இயக்குநர் திரு.எம்.சோமசுந்தரம் அவர்கள் தலைமை ஏற்று சிறப்புரை ஆற்றினார் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறோம். இந்தப் விழாவிற்கு ஸ்பான்சர் செய்ததில் AMMAN - TRY நிறுவனம் பெருமிதம் கொள்கிறது.

26 டிசம்பர் 2023 அன்று YES TRICHY " CHAPTER DAY 2023 " ஹோட்டல் RED Fox - ல் சிறப்பாக நடைபெற்றது. இதில் எங்களது நிர்வாக இயக்குநர் திரு.எம்.சோமசுந்தரம் அவர்கள் தலைமை பொறுப்பேற்று சிறப்புரை ஆற்றினார். இந்த நிகழ்ச்சிக்கு ஸ்பான்சர் செய்ததில் AMMAN - TRY நிறுவனம் பெருமிதம் கொள்கிறது.







20 நவம்பர் 2023 அன்று திருச்சியில் உள்ள ஹோட்டல் Courtyard by Marriott-ல் புது வருடத்தை வெற்றிகரமாக தொடங்க வெற்றியாளர்களுடன் ஒரு கருத்தரங்கம் "Business Success Strategy " சிறப்பாக நடைப்பெற்றது. இதற்கு ஸ்பான்சர் செய்ததில் AMMAN - TRY நிறுவனம் பெருமிதம் கொள்கிறது.

## 75-வது குடியரசு தினம்

நாட்டின் 75-வது குடியரசு தினமானது 26 ஜனவரி 2024 அன்று AMMAN-TRY யின் நிறுவன தலைவர் திரு. சு.பி. முத்துராமலிங்கம் அவர்கள் எங்கள் தலைமை அலுவலகத்தில் தேசிய கொடி- யை ஏற்றினர். இவ்விழாவில் அலுவலகப் பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.அதே நாளில் AMMAN-TRY யின் அனைத்து தொழிற்சாலையிலும் பணி மேலாளர்கள் தேசிய கொடி- யை ஏற்றினார்கள்.









தைப்பூசம்

25 ஜனவரி 2024 அன்று தைப்பூசம் திருவிழாவானது பழனி மற்றும் வடலூர் முருகன் கோவில்களில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு வருகை தந்த பக்த கோடிகள் அனைவருக்கும் சாமி போட்டோவுடன் கூடிய பாக்கெட் காலண்டர் **AMMAN-TRY** சார்பாக வழங்கப்பட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.



## பூமி பூஜை

26 ஜனவரி 2024 வாஸ்து நாள் அன்று பூமி பூஜை செய்த மக்கள் அனைவருக்கும் AMMAN-TRY சார்பாக சாமி போட்டோ வழங்கப்பட்டது. மேலும் AMMAN-TRY TMT கம்பிகளின் தரத்தை பற்றியும், தயாரிக்கும் முறை பற்றியும், உபயோகிக்கும் மூலப்பொருட்கள் பற்றியும் விளக்கம் அளிக்கப்பட்டது.

# பொங்கல் கொண்டாட்டங்கள்

AMMAN-TRY நிறுவனத்தில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களும் கலந்து கொள்ளும் வகையில் " பொங்கல் விழானது " திருச்சியில் உள்ள எங்கள் தொழிற்சாலையில் 13 ஜனவரி 2024 அன்று சிறப்பாக நடைபெற்றது.

அலுவலக ஊழியர்கள் மற்றும் தொழிற்சாலை ஊழியர்கள் சுமார் 300 பேர் பங்கேற்றார்கள். விழா நிகழ்வில் நமது தமிழக பாரம்பரிய விளையாட்டுக்கள் அனைத்தும் நடைபெற்றது. இதில் தொழிற்சாலைகளிலிருந்த பெரும்பான்மையான வட இந்திய தொழிலாளர்களும் இவ்விழாவினை கண்டுகளித்தது மட்டுமல்லாமல் அனைத்து விளையாட்டுகளிலும் பங்கு பெற்று விழாவினை சிறப்பித்து மகிழ்ந்தார்கள்.



அன்பளிப்பு

# விபூதி பாக்கெட் சுவர் கடிகாரம்

மதுரை, திருச்சி, ஓசூர், சேலம், தர்மபுரி, கோவை, தென்காசி, நாமக்கல், தஞ்சாவூர், நாகப்பட்டினம், காஞ்சிபுரம், திருநெல்வேலி, திருவாரூர், புதுக்கோட்டை, கிருஷ்ணகிரி, கரூர், சிவகங்கை, விருதுநகர், கன்னியாகுமாரி, கடலூர், திருவண்ணாமலை, மயிலாடுதுறை, மற்றும் பெரம்பலூர் ஆகிய 35 க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் உள்ள பிரசித்தி பெற்ற வழிபாட்டு ஸ்தலங்களுக்கு AMMAN-TRY நிறுவனத்தின் சார்பாக விபூதி பாக்கெட்டுகள் வழங்கப்பட்டதோடு, சில வழிபாட்டு ஸ்தலங்களுக்கு சுவர் கடிகாரங்களும் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.





IS : 2830 IS : 14650 IS : 1786

## AMMAN-TRY STEELS PVT LTD.,

No. 15 & 16, Mannarpuram Main Road, Mannarpuram
Trichy – 620 020. For Support +91 75503 01234

info@ammantry.com www.ammantry.com Follow us...